உ. த. குரல் பேரவை குழு:–

- இரீயூனியன்: திரு. வீ.தேவாகுமார்
- பிரான்ஸ்; திரு அரிமாவளங்கோ
- இந்தோனேசியா: திரு. ராமுலு
- பீசி: திரு. க. அப்பாப்பிள்ளை
- தென்னாபிரிக்கா: திரு. மு. அன்பன், திரு. அ. சோதிநாதன்
- தமிழ் நாடு: திரு. இளந்தமிழன்
- மொறிசியசு: திரு. அ. புட்பரதம்
- மலேசியா: திரு. நாரண. திருவிடச்செல்வன்
- பர்மா; திரு ரெ. மாரிமுத்து, திரு. கோ. தமிழன்பன்

உலகத் தமிழர்களே ஒன்றுபடுக!

விலை சதம் 50

# உலகத் தமிழர் குரல்

குரல்: 2 | தி. பி, 2007 வைகாசித்—திங்கள் மே 1976 | ஒலி 10

ஆசிரியர்: குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்

# இன்றைய மலேசியத் தமிழ்ச்சமுதாயம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

## எமது கருத்து

### மேலை நாடுகளில் தமிழர் ஒற்றுமை !

உலகின் எந்தக் கோடியிலாவது பத்துத் தமிழர்கள் ஒன்று கூடிவிட்டால் அங்கு ஒரு சங்கம் நிறுவித் தமிழ் வளர்க்கத் தவறுவதில்லை !

இலண்டனிலே, பாரீசிலே, ரோரேண்டாவிலே, நியூயோர்க்கிலே, குவைத்திலே, சோவியத் ஒன்றியத்திலே,

இன்று நாம் கேட்கும் தமிழ் முழக்கம் எல்லாம் நம் இனத்தவரிடையே வளர்ந்து வரும் மொழிப் பற்றுக்கும், இனப் பற்றுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றன!


வரவேற்கிறோம்! பூரிக்கிறோம்! பெருமைப்படுகிறோம்!

ஆனால்,

கூடவே மோதலும், குரோதமும், வீண் பகைகளும் அவர்களுடன் சென்று குடியேறி வருவதையும் இதனால் தமிழர் தம் கூட்டுச் சக்தி சீர்குலைந்து வருவதையும் கண்டு நாம் ஆழ்ந்த வேதனைப் படுகிறோம்!

"தமிழன் ஆளும் தகுதி அற்றவன்; ஆளப்படுவதற்கே பொருத்தமானவன்" என்ற மாற்றாரின் கிண்டல் மொழிக்கு உயிரூட்டுவதாகவே இந்த நிகழ்ச்சிகள் அமைந்து வருகின்றன!

— 4ம் பக்கம் பார்க்க —



"தமிழ் நேசன்" ஆசிரியர்
'முத்தமிழ் வித்தகர்'

முருகு. சுப்பிரமணியன்

**மலாயப் பல்கலைக் கழக விரிவுரையாளர் தரும் அதிர்ச்சியூட்டும் புள்ளிவிபரங்களும், "தமிழ் நேசன்" ஏட்டின் கருத்தும்!**

- தமிழ்த்திரு. நாரணதிருவிடச் செல்வன் -
கடாரம்

சமூக நல அமைச்சின் சிறுவர் இல்லங்களில் 44 சத விகிதம் தமிழ்க் குழந்தைகள்! முதியோர் இல்லங்களில் 26 சத விகிதம் தமிழர்கள்! குழந்தைகள் சீர்திருத்தப் பள்ளிகளில் 41 சத விகிதம் தமிழ்ச் சிறுவர்கள்! குற்றவாளிகளுக்கான காவல் இல்லங்களின் நன்னடத்தை விடுதிகளில் 42 சத விகிதத்தினர் தமிழர்கள்! விபசாரம் போன்ற அபாயங்களை எதிர்நோக்கும் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்களில் 32 சத விகிதம் தமிழ்ப் பெண்கள்! பிச்சைக்கார புனர்வாழ்வு நிலையங்களில் 37 சத விகிதம் பேர் தமிழ்ப் பெருமக்கள்! —

— 4ம் பக்கம் பார்க்க —

உலகத் தமிழா ! நீ, உன் இனத்தில் பற்றிருந்தால் உலக அரங்கினிலே உன் குறையைப் பேச எழு !
நிலவும் கொடுமையினை நீதியின் முன்னே நிறுத்து ! இன்றே கிளம்பு இனிப்பொறுக்க நியாயமில்லை !

# தமிழ் உலகச் செய்திகள் :

## இறீயூனியன் தீவுத் தமிழர்களுக்காக

## ' J' Apprends Le Tamoul '

பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்ற திருவாக்குக்கு உயிரூட்டும் வகையில் இறீயூனியன் ( REUNION ) தீவினைச் சேர்ந்த எங்கள் தமிழ்த்திரு வீ. தேவாகுமார் அவர்கள் தமது அன்னை திருமதி வீ. சிந்தாமணி அம்மையார் நினைவாகத் தனது நாட்டுத் தமிழ்மக்கள் தமிழ் மொழியினை, பிரெஞ்சு மொழி மூலம் இலகுவில் படித்துக் கொள்ள '' J' Apprends Le Tamoul '' என்ற முதற்புத்தகத்தை, தமிழ் பிரெஞ்சு மொழிகளில் அழகிய பட விளக்கங்களுடன் அச்சேற்றி வெளியிட்டிருக்கிறார். அதன் ஒருபடி வான் அஞ்சலில் கிடைக்கப் பெற்றோம்.




இறீயூனியன் தீவின் மொத்த சனத்தொகை 5 இலட்சமாகும், இதில் பாதித்தொகையினர் தமிழ் மரபு வழிவந்தோரே என்கிறார் பேராசிரியர் சு. கு. சட்டர்சி அவர்கள். பல இன மக்களுடன் சங்கமமாகிவிட்டவர்கள் போக, ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர், தமிழ்த் தன்மை தேங்கப் பெற்றுத் தமிழ்ப்பண்பாடு அம்சங்களைக் கடைப்பிடித்துத் தமிழர்களாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் பெரும் பான்மையினருக்குத் தமிழே தெரியாது என்பதும் தமது கோவில்களில் இறைவழி பாட்டைக் கூடப் பிரெஞ்சு மொழியால்தான் இவர்கள் செய்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது, தானுண்டு தன்வேலை உண்டு என்று வாழாமல் தன் இன மக்களுக்கும் தாய் மொழியான தமிழுக்கும் தொண்டுபுரிய, அங்கு நம் தாய்மொழியை வாழவைக்கச் செயலளவில் தொண்டாற்றத் துடித்துக் கொண்டிருக்கும் நம் தேவா அவர்களை உலகத் தமிழ் அறிஞர்கள் நன்கு பயன் படுத்தி, இறீயூனியன் தீவில் மறுபடியும் நம் மொழியும் பண்பாடும் வளர வழிகாண்பார்களெனப்பெரிதும் எதிர்பார்க்கிறோம். இத் தீவில் வாழும் நம் தமிழ் உடன் பிறப்புக்களின் இன்றைய நிலையினை உலகத் தமிழர்களுக்கு விளக்கும் வகையில் நூல் ஒன்றினையும் திரு. தேவா அவர்கள் கூடிய விரைவில் வெளியிடவிருக்கிறார் என்ற நல்ல செய்தியை 'குரல்' வாசகர்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறோம்.

---

### நாட்டைப் பிரிக்க அனுமதியோம்!

தம்புள்ளை, இலங்கை, மே 23,

''குடியரசு தினத்தன்று தனி நாடு கோரிக்கைகளைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளோர்கள் மீது அரசாங்கம் சட்டநடவடிக்கை எடுக்கும். சிறுபான்மை இனத்தவரைத் தவறான வழியில் நடாத்திச் சென்று நாட்டை இரண்டாகப் பிரிக்கும் முயற்சியை அரசாங்கம் ஒரு போதும் அனுமதியாது. நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்குத் தமிழரசுக் கட்சி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரசாரம் செய்கிறது, இம் முயற்சியை அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை. யாழ்ப்பாணத்தில் சில துண்டு பிரசுரங்களை வினியோகித்ததாக தமிழரசுக் கட்சியின் எம். பிக்கள் மூவரும் அதன் தொண்டர்கள் பலரும் கைதாகியுள்ளனர். நாட்டை இரண்டாகப் பிரித்தல் அவசியம் என அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. அரசாங்கத்தின் பொறுமையை தமிழரசுக் கட்சி பலவீனமாகக் கருதிச் செயல்படமுனைகிறது. தென் இந்தியாவில் இது போன்ற நடவடிக்கைளில் இறங்க முனைந்த மாநில அரசாங்கங்கள் கலைக்கப்பட்டு சனாதிபதியின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப் பட்டதையும் நினைவுறுத்த விரும்புகிறேன்'' இவ்வாறு இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் தம்புள்ள மகாவித்தியாலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரி 25. 5. 1976

(4-ம் பக்கம் பார்க்க)

★ ''தெய்வத்தை நினைந்து தெய்வீக வாழ்வு வாழ்க! இறப்பதும் பிறப்பதும் மனிதனுக்குக் கிடையாது''

யோகி. சிவலிங்க அடிகளார், வன்கூவர்' கனடா.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

# தமிழ் உலகச் செய்திகள்:

## தமிழ் நாடு......

மொழி வெறி, ஆதிக்க வெறி, இன வெறி போன்ற பல வெறிக்குணம் உடையவர்கள் வடநாட்டவர்கள். மற்ற இனத்தையும் அவர்களது உரிமைகளையும் நசுக்கிப் பிழிந்து தன் இனத்தை உயர்த்துவதையே குறியாகக் கொண்டவர். இது போன்ற வெறியர்களிடமிருந்து தமிழகம் விடுதலைப் பெற்றால் அன்றி தமிழினம் வாழ வழியில்லை என்பதை அண்மையில் தமிழக அரசியலில் ஏற்பட்டிருக்கும் கொடுமைகளாலும், காமராசர் போன்ற அரசியல் தலைவர்களுக்கு வடநாட்டு ஏகாதிபத்தியமும் ஆரியப் பார்ப்பனர்களின் வஞ்சகச் செயல்களால் நேர்ந்த கொடுமைகளாலும் உணரலாம். மேலும் தமிழகத்தின் உரிமை மண்ணை ....... தன் ஆணவம் கொண்ட இந்திரா...... . தாரை வார்த்தது, வடநாட்டு ஏகாதிபத்தியம் தமிழ் இனத்தை எதுவேண்டுமானாலும் செய்யலாம். தட்டிக் கேட்க யாரும் இல்லை என்பதை உறுதிப் படுத்தி விட்டது! இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழன் வடநாட்டு வெறியர்களின் அடிமைகளாகி விட்டான். இந்தக் கொடுமையை மாற்ற வழி இல்லையா? மானத்தை இழந்தவனாகத், தமிழன் வாழ வேண்டுமா? தமிழனுக்கே உரிய மொழிப் பற்றும் வீரமும் இன்று செத்து மடிந்து விட்டதா?

ஆண்டி வேடங்கொண்டு சமயங்களின் வழியே தமிழக அரசியலைக் கைப்பற்றிய ஆரியப்பார்ப்பனர்களின் கொடுமைகளைத் தகர்த்தெறியத் தியாகத் தொண்டுகள் செய்து தமிழக விடுதலைக்குப் பாடுபட்ட மறைமலையடிகள் திரு. வி. க. பன்னீர்ச்செல்வம், பெரியார், பாரதிதாசன், கர்மவீரர் காமராசர், பேரறிஞர் அண்ணா, போன்றவர்கள் செயல்கள் விழலுக்கிறைத்த நீராகத் தமிழ் நாட்டில் போய் விட்டதா? தன்மானம் உள்ள தமிழன் தமிழ் நாட்டில் இல்லையா? தமிழனுக்கு நேரும் கொடுமைகளைக் கேட்க இன்று உலகில் யாரும் இல்லை. இதன் காரணம்தான் பர்மாவிலிருந்தும்...... .. லிருந்தும் தமிழர்களது உரிமைகளையும் உடமைகளையும் பறித்துக் கொண்டு வெறும் கையுடன் தமிழ் நாட்டுக் கஞ்சித் தொட்டிகளை நோக்கி — தமிழகத்தைச் சுடுகாடாக எண்ணி—சாவதற்காகத் தமிழர்களை விரட்டிக் கொண்டிருக்கின்றனர். எனவே உலகில் பரந்து வாழும் தமிழர்கள் அதிலும் குறிப்பாக மேலைய நாடுகளில் வாழும் தமிழர்கள் அதிகார வெறிகொண்ட இந்தியப் பிரதமர் இந்திராவால் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொடுமைகளைத் தகர்த்து, தமிழ் நாடு விடுதலைப் பெற்று, நம் உடன் பிறப்புக்கள் உரிமையுடன் ஆளும் நிலையை உருவாக்க ஒன்றுகூடி முன் வரவேண்டும்.

தாய்நாட்டுக்குச் செய்யும் மாபெரும் தொண்டு தமிழக விடுதலை. தமிழக விடுதலைக்காக உலகில் வாழும் தமிழர்கள் எதையும் செய்யத் தயங்கக்கூடாது. உரிமைப் போரில் வியட்னும் கண்ட வெற்றியைப்போல, தமிழக விடுதலைப் போரில் தாய் தமிழ்நாட்டில் வாழும் நம்உடன் பிறப்புக்களுக்கு உலகத் தமிழர்கள் ஒன்றுதிரண்டு உதவி செய்து இந்திராவின் ஆணவத்தையும் ஆரியப் பார்ப்பனர்களின் கீழறுப்பு வேலைகளையும் துடைத்தொழிக்க வேண்டுமென்பதே தமிழர் முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்! தமிழ்நாடு தமிழருக்கே! வாழ்க தமிழ்.


—நன்றி- ''தமிழன் குரல்;' இலண்டன்.




வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!

''மில்க்வைற்'' சவர்க்காரத் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# மலேசியத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குவதில் நீதியைக் கடைப் பிடியுங்கள்!



தமிழ்த் திரு
**வி. டேவிட்**

கோலாலம்பூர், ஏப், 27

''மலேசியத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குதல் தொடர்பாகச் சட்டம் நீதியாகவும் நேர்மையாகவும் அமுலாக்கப்படுதல் வேண்டும். 1969-ம் ஆண்டுக்குப் பின் குடியுரிமைப் பெற விண்ணப்பிக்கும் தமிழர்கள் பல்வேறு சிரமங்களில் சிக்கித் தவித்து வருகின்றனர். குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் மனுக்களில் பத்துச் சதவிகிதம் கூட ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பிறந்த 'சூரு' 1922-ல் தான் அறிமுகப் படுத்தப் பட்டது. அதற்குமுன் பிறந்தவர்கள் அத்தாட்சி ஏதும் காட்ட இயலாது. எல்லா இந்தியர்களும் இந்த நாட்டையே தாய் நாடாக்கிக் கொண்டுவிட்டனர். அவர்கள் மற்ற நாடுகளிடமிருந்து எல்லாவிதத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு விட்டனர், எனவே அரசு வீண காலதாமதத்தைக் கைவிட்டு, மனிதாபிமானப் போக்கினைப் பின்பற்றி உடனடியாக இவர்களுக்குக் குடியுரிமை வழங்க முன்வரவேண்டும்.'' இவ்வாறு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் மலேசிய பெக்கெமாஸ் கட்சியின் அரசியல் துறை இயக்குநர் திரு. வீ. டேவிட் அவர்கள். மேலும் அந்த அறிக்கையில் அவர் ''மலாயாப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல, விவசாயப் பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி போன்றவற்றிலும் இன விகிதாசாரப்படி தமிழ் மாணவர்களுக்கு அரசு அநுமதி வழங்க வேண்டும். மலேசியத் தமிழ் மாணவர்கள் பலர் தமது பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு வேலையில்லாமல் தவிப்பது வேதயாக இருக்கிறது. தமிழ் மாணவரை எதிர் நோக்கும் இந்தப் பிரச்சனைக்கு பிரதமர் டத்தோ ஹுசேன் ஒன் மூன்றுவது மலேசியத் திட்டத்தில் பரிகாரம் காணுவார் என எதிர்பார்க்கிறோம்.'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

—தகவல். தமிழ்த்திரு நாரணதிருவிடச் செல்வன்

# தமிழ் உலகச் செய்திகள்:

## தடுப்புக் காவலில்

கொழும்பு — மே 24

''......அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட, பிரிவினையைத் தூண்டும் பிரசுரங்களை வினியோகித்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், ஊர்காவற்றுறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை உதவிப் பொலிஸ் அதிபர்களால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே! இவர்கள் விசேட விமானத்தின் மூலம் கொழும்பு கொண்டுவரப்பட்டனர். கொழும்பு-7ல் உள்ள பொலிஸ் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இவர்களுக்குப் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன......''

— 'வீரகேசரி' 24-5-76

(பத்து நாட்களின் பின் 31.5.76ல் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மூன்று நீதிபதிகள் குழுவின் தலைமையில் 18.6.76ல் விசாரணை ஆரம்பமாகவிருக்கிறது). (ஆசிரியர்)

## தமிழ் நாடு தமிழருக்கே !

— இலண்டன் மே 1

இந்திய விடுதலையின் போது வடநாட்டு மகமதியர்களால் உருவாக்கப்பட்ட பாகிஸ்தானைப் போன்றதோ அல்லது அண்மையில் இந்திரா காந்தியால் உருவாக்கப்பட்ட வங்காள தேசத்தைப் போன்றோ, நேற்றோ அல்லது இன்றோ உருவாக்கப் பட்டது அல்ல தமிழ் நாடு! பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இந்திராவின் பரம்பரையான ஆரியப் பார்ப்பனர்கள் இந்தியாவில் குடி புகு முன்பே உலகில் தோன்றிய ஆதி மனிதனால் தோற்றுவிக்கப்பட்டது பெருமைக்குரிய தமிழ் நாடு!

ஆங்கிலேயரின் ஆளுகையின் போது ஆளும் வசதியை முன்னிட்டு பர்மா, ஈழம் போல் தமிழகத்தையும் இணைத்து ஆண்டார்கள். இணைத்த ஆங்கிலேயர்கள் இந்திய நாடு விடுதலை பெற்றபோது ஈழத்தையும் பர்மாவையும் கொடுத்தது போல் தமிழகத்தை தமிழர்களிடம் ஒப்படைக்கத் தவறி விட்டார்கள். இதன் விளைவாக, வரலாற்றுச் சிறப்புடைய தமிழ் நாடு இந்தியநாடு என்ற போர்வையில் மூடி மறைக்கப் பட்டிருக்கிறது.

(3 - ஆம் பக்கம் பார்க்க)

★ '' உலகத்தமிழர் குரல் '' தொடர்பான கடிதங்களுக்கு: R. KANAGARATNAM, 49, COLOMBO STREET, KANDY, CEYLON.

1ம் பக்கத் தொடர்ச்சி

## எமது கருத்து

தமிழகத்தில், ஈழத்தில் மட்டுமல்ல; உலகின் எந்தக் கோடியிலும் தமிழனால் இன்று நிம்மதியாக வாழ முடிய வில்லை. மாற்று இனத்தவர் தயவில்தான் தனது மொழியை, பண்பாட்டை, சுதந்திரத்தை, ஆளும் உரிமை போன்ற பிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய கொடுமை, சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு வளர்ந்து வருகிறது. தமிழனை எவனும் சீண்டிவிடலாம்; தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற ஒரு நிலைமை நீடித்து வருகிறது! இந்தச் சாபக்கேட்டை உடைத்தெறிந்து, சர்வதேச அரங்கில் ஒரு மாபெரும் சக்தியாகத் தமிழினம் தலையெடுக்க வைத்திட வேண்டிய பெரும் பொறுப்பு மேலை நாடுகளில் குடியேறி வாழும் நம் தமிழ் இளைஞருக்கு உண்டு!

எனவே, தமக்குள் பல்வேறு அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு, தமது கூட்டுச் சக்தியை வீணடிப்பதைத் தவிர்க்க வேண்டுமெனவும் முடியுமானால் ஒரு கூட்டிணைப்பு இயக்கத்தின் கீழ் எல்லாத் தமிழர் அமைப்புகளும் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் அறைகூவல் விடுக்கிறோம்!

வாழ்க உலகத் தமிழர் ஒருமைப்பாடு !

1ம் பக்கத் தொடர்ச்சி

## இன்றைய மலேசியத்....

மலாய்ப் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறை விரிவுரையாளர் டாக்டர் டி. மாரிமுத்து அவர்கள் பினாங்கு இந்திய வர்த்தக சபை நடாத்திய கருத்தரங்கில் இன்றைய மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆற்றியுள்ள உரையின் போது தான் அதிர்ச்சியூட்டும் மேலே குறிப்பிட்ட புள்ளி விபரங்களைத் தந்துள்ளார். இது தொடர்பாக, மலேசியத் தமிழ்த் தினசரியான 'தமிழ் நேசன்' தனது 18-4-76 ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:— 'நாட்டு மக்கள் தொகையில் 10 சத விகிதமாக இருந்து வரும் தமிழ்ச் சமூகம் வேலை வாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்பு, வீட்டு வசதி, நிலக் குடியேற்றம் முதலான பல்வேறு மேம்பாட்டுத் துறைகளில் தனக்குரிய நியாயமான 10 சத விகித வாய்ப்புக்களைப் பெறுவது இழுபறியாகவும் போராட்டமாகவும் இருந்து வரும்போது பல்கலைக் கழக விரிவுரையாளர் குறிப்பிட்ட பல துறைகளில் தனது 10 சத விகித வாய்ப்புக்கும் மேலாகப் போராட்டம் எதுவுமே இன்றி 40 சத விகிதம் 50 சத விகிதம் என்று 'உன்னத ஸ்தானத்தை' வகித்து வரும் பரிதாப நிலையை இப்புள்ளி விபரங்கள் உணர்த்துகின்றன. சமுதாயம் நாளுக்கு நாள் சீரழிந்து, உருக்குலைந்து, திசைமாறிச் சென்றுகொண்டிருப்பதை இந்தப் படப்பிடிப்பு துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. குபேர நாடக உலகம் ஏற்றிப் போற்றுகின்ற மலேசிய நாட்டின் மூன்றாவது முக்கிய சமூகமான தமிழ்ச் சமூகம் நாளுக்கு நாள் பின்னோக்கிச் சின்னாபின்னப்பட்டுப் போகின்ற ஆபத்தையே தக்க தருணத்தில் டாக்டர் மாரிமுத்து எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்த அவல நிலைக்கு எவர் மீதும் பழி போட்டுத் தப்பித்துக் கொள்ள சமூகத் தலைவர்களும் இயக்கங்களும் முயலக்கூடாது. ஒரு சமுதாயம் உயர்வதும் தாழ்வதும் அந்தச் சமுதாயத்தின் கையில் தான் முழுக்க முழுக்க இருக்கிறது. துடிப்பில்லாத அக்கறையில்லாத சமுதாயத்தை ஆண்டவனால் கூட உயர்த்த முடியாது. அரசியல் தலைவர்களும், சமுதாய இயக்கங்களும், தொண்டர்களும் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தைப் பிடித்துள்ள படுமோசமான இந்தச் சீர்குலைவைத் தடுத்து நிறுத்துவதற்கு முழு மூச்சாகச் செயல் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற முற்படவேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை, கண்டி செட்டி காடின்ஸ் 128/8, இலக்க இல்லத்தில் வசிக்கும் இரா கனகரத்தினம் அவர்களால், கொழும்பு. 102/2, ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள, எம். ஜி. எம். அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30—5—76 ல் வெளியிடப்பட்டது.